பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**24 01 2026 SATURDAY 7.15 PM**

ஆகாஷவாணி

## தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

2. உலகளாவிய சவால்களை எதிர்கொள்ள நம் நாட்டு இளையோர் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. புத்தரின் போதனைகள் நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாக உள்ளது என்று மத்திய சிறுபான்மையின விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

4. பங்களாதேஷில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

5. இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெறவுள்ள உலகக் கோப்பை டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டியில் பங்களாதேஷ் அணிக்கு பதிலாக ஸ்காட்லாந்து சேர்க்கப்பட்டுள்ளது.

-இனி விரிவான செய்திகள்-

<<<<<<>>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமரின் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது, இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பும் செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<<>>>>>

பெண் குழந்தைகளின் பாதுகாப்புக்கு நாடு உறுதிபூண்டிருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தேசிய பெண் குழந்தைகள் தினத்தையொட்டி, பிரதமர் இன்று விடுத்துள்ள சமூக வலைதள பதிவில், கடந்த பத்தாண்டுகளில் பெண் குழந்தைகளுக்கு சிறந்த கல்வி, திறன் பயிற்சி, மருத்துவ வசதிகளை வழங்கியுள்ளதாக கூறியுள்ளார்.

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதற்கு பெண் குழந்தைகளின் பாதுகாப்பு மிகவும் முக்கியமானது என்றும், அதற்காக

மத்திய அரசு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

குழந்தைகளுக்கான உரிமைகள், கல்வி, சுகாதாரம், சத்துணவு, நலத்திட்டங்கள் உள்ளிட்டவை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 24-ஆம் தேதி தேசிய பெண் குழந்தைகள் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

பாலின பாகுபாட்டை களைவது, அவர்களுக்கு சம வாய்ப்புகளை அளிப்பது, பெண் குழந்தைகள் வாழ்வதற்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கி, அவர்களுக்கான அதிகாரத்தை படிப்படியாக அளிப்பது உள்ளிட்டவை குறித்த விழிப்புணர்வும் இந்நாளில் மேற்கொள்ளப்பட்டது.

பிரதமர் திரு நரேந்திர மோடி கடந்த 2015-ஆம் ஆண்டு ஜனவரி 22-ஆம் தேதி தொடங்கிய பெண் குழந்தைகளை காப்போம் — பெண் குழந்தைகளுக்கு கல்வி கற்பிப்போம் திட்டத்தின் பத்தாண்டுகள் நிறைவையொட்டி, கடந்த வியாழக்கிழமை சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பெண் சிசு கொலை, குழந்தை திருமணம், பாலின பாகுபாடு உள்ளிட்டவற்றை தடுப்பது குறித்த விழிப்புணர்வு பணியை மத்திய

மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் ஏற்படுத்தி வருகிறது.

<<<<<<>>>>>

நாட்டின் 77-ஆவது குடியரசு தினத்தையொட்டி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு நாளை மாலை 7 மணிக்கு நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார்.

ஆகாஷ்வாணியின் அனைத்து அலைவரிசைகளிலும், தூர்தர்ஷனின் அனைத்து சேனல்களிலும் குடியரசுத் தலைவரின் உரை ஒலிபரப்பாகிறது.

இந்தியிலும், ஆங்கிலத்திலும் குடியரசுத் தலைவர் ஆற்றும் உரையின் தமிழாக்கத்தை நாளை இரவு ஒன்பதரை மணிக்கு சென்னை ஆகாஷ்வாணியில் ஒலிபரப்புகிறது.

இதனை தமிழகத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும், புதுச்சேரி வானொலி நிலையமும் அஞ்சல் செய்யும்.

<<<<<<>>>>>

உலகளாவிய சவால்களை எதிர்கொள்ள நம் நாட்டு இளையோர் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுதில்லியில் நடைபெறவுள்ள குடியரசு தின அணிவகுப்பில் பங்கேற்கவுள்ள தேசிய மாணவர் படையினரிடையே உரையாற்றுகையில், தேசப்பற்றுக்கு மற்றும் ஒழுக்கத்திற்கு எடுத்துக்காட்டாக தேசிய மாணவர் படையினர் விளங்குவதாக கூறினார்.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது, நமது ராணுவத்தினர் பாகிஸ்தானை சேர்ந்த தீவிரவாதிகளை ஒடுக்கியதாக அவர் தெரிவித்தார்.

வரும் 2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க தேசிய மாணவர் படையினரின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது என்று அவர் குறிப்பிட்டார்.

நமது நாடு வளர்ச்சிப் பாதையில் முன்னேறி வருவதாக கூறிய திரு ராஜ்நாத் சிங், சாலைகள், மின்சாரம், மருத்துவம், கட்டமைப்பு உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சியடைந்து வருவதாக தெரிவித்தார்.

<<<<<<>>>>>

உத்தரப்பிரதேச மாநில நிறுவன தினத்தையொட்டி, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, அம்மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், மத்திய — மாநில அரசுகளின்கீழ், உத்தரப்பிரதேசம் வளர்ச்சியடைந்து உலகத்தரம் வாய்ந்த உள்கட்டமைப்பில் முன்னேறி வருவதாக கூறினார்.

நாட்டின் நான்காவது பெரிய பொருளாதார மாநிலமாக உத்தரப்பிரதேசம் விளங்குவதாக திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<>>>>>

புத்தரின் போதனைகள் நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாக உள்ளது என்று மத்திய சிறுபான்மையின விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் உலகளாவிய புத்தர் உச்சிமாநாட்டில் உரையாற்றிய அவர், வலுவான நாடு என்ற இலக்கை எட்டுவதற்கு புத்தரின் போதனைகளை பின்பற்ற வேண்டும் என்று கூறினார்.

புத்தரின் போதனைகளை பரப்புவதற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாக திரு கிரண் ரிஜிஜு தெரிவித்தார்

<<<<<>>>>>

துணை மருத்துவப் படிப்புகளுக்கு நீட் தேர்வை கட்டாயமாக்கி தேசிய துணை மருத்துவம் மற்றும் சுகாதாரப் பணிகள் ஆணையம் அறிவித்துள்ளதை கைவிட வலியுறுத்தி, பிரதமர் திரு நரேந்திர

மோடிக்கு, தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று கடிதம் எழுதியுள்ளார்.

வரும் கல்வியாண்டு முதல் இளங்கலை பிசியோதெரபி, இளங்கலை **Occupational** தெரபி ஆகிய இரண்டு படிப்புகளில் சேருவதற்கு தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு கட்டாயமாக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர், இதனால் மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று தெரிவித்துள்ளார்.

இளநிலை மருத்துவப் படிப்பு சேர்க்கைக்கான நீட் தேர்வை தமிழகம் தொடர்ந்து எதிர்த்து வருகின்ற நிலையில், துணை மருத்துவப் படிப்புகளுக்கும் நீட் தேர்வு கட்டாயமாக்கப்படும் அபாயம் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த உத்தரவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று பிரதமரை, திரு மு.க.ஸ்டாலின் அந்த கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>

மாணவர்கள் நாட்டின் வரலாற்றை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று மத்திய பாதுகாப்புத்துறை இணையமைச்சர் திரு சஞ்சய் சேத் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் வீர வரலாறு தொடர்பான நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், தேசிய பெண் குழந்தைகள் தினத்தன்று இந்த நிகழ்ச்சி நடத்துவது மகிழ்ச்சி அளிப்பதாக தெரிவித்தார்.

91 பள்ளிகளில் இருந்து 100 மாணவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய கல்வித்துறை இணையமைச்சர் திரு ஜெயந்த் சௌத்ரி, வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட இளைஞர்கள் பங்காற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

மாணவர்கள் பொறுமையுடன் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார்.

<<<<<>>>>>

பங்களாதேஷில் அடுத்த மாதம் 12-ஆம் தேதி நடைபெறவுள்ள தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

பங்களாதேஷ் தேசிய கட்சியும், ஜமாயத்தே இஸ்லாமி கட்சியும் முக்கியமாக இத்தேர்தலில் போட்டியிட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அவாமி லீக் கட்சி தேர்தலில் போட்டியிடாத நிலையில், ஜமாயத்தே இஸ்லாமி தலைமையிலான பத்து கட்சிகள் கொண்ட

கூட்டணியும், பங்களாதேஷ் தேசிய கட்சியும் பிரதான கட்சிகளாக போட்டியிடுகின்றன.

<<<<<<>>>>>

இந்தோனேஷியாவில் இன்று ஏற்பட்ட நிலநடுக்கத்தில் ஏழு பேர் உயிரிழந்தனர்.

மேற்கு ஜாவா மாகாணத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தாலும், தொடர் மழையாலும் காணாமல்போன 82 பேரை தேடும் பணியில் நடைபெற்று வருவதாக அந்நாட்டு தேசிய பேரிடர் மேலாண்மை தெரிவித்துள்ளது.

மேற்கு Bandung பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவால் ஏராளமானோர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

இந்தியா மற்றும் இலங்கையில் அடுத்த மாதம் தொடங்கவுள்ள டுவென்டி — டுவென்டி உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியிலிருந்து பங்களாதேஷ் அணிக்கு பதிலாக ஸ்காட்லாந்து அணியை சேர்த்துள்ளதாக சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு காரணங்களை சுட்டிக்காட்டி, இந்தியாவில் விளையாட மறுத்ததையடுத்து, பங்களாதேஷ் அணி இப்போட்டிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக ஐ சி சி அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக, பங்களாதேஷ் கிரிக்கெட் வாரிய தலைவருக்கு ஐ சி சி மின்னஞ்சல் அனுப்பியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<<<>>>>>

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், தில்லி அணி இன்று பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

வதோதராவில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற தில்லி அணி முதலில் தீர்மானித்துள்ளது.

--------------

19 வயதுக்குட்பட்டோருக்கான உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில், நியூஸிலாந்து அணிக்கு எதிராக 136 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு ஆடிவரும் இந்தியா சற்றுமுன்வரை 2 விக்கெட் இழப்புக்கு 88 ரன் எடுத்துள்ளது.

Bulawayo-வில் நடைபெற்று வரும் இப்போட்டியில், முதலில் பேட் செய்த நியூஸிலாந்து அணி 135 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

மழை காரணமாக ஆட்டம் 37 ஓவராக குறைக்கப்பட்டது.

புவனேஷ்வரில் நடைபெற்று வரும் தமிழக அணிக்கு எதிரான ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியின் 3-வது நாள் ஆட்ட நேர இறுதியில் ஒடிஷா இரண்டாவது இன்னிங்சில் 2 விக்கெட் இழப்பிற்கு 47 ரன் எடுத்துள்ளது.

முன்னதாக, தமிழக அணி இரண்டாவது இன்னிங்சில் 316 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

ஒடிசா அணி, முதல் இன்னிங்ஸில் 148 ரன் எடுத்தது.

தமிழக அணியின் முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 286 ரன்.

------------

ஆஸ்திரேலிய ஓப்பன் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் யூகி பாம்ரி - ஸ்வீடனின் Andre Goransson இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் இந்த இணை 4-6, 7-6, 6-3 என்ற செட்கணக்கில் மெக்ஸிகோவின் Santiago — நெதர்லாந்தின் David Pel இணையை வென்றது.

<<<<<<END>>>>>